மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 585, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

585—

பாமாயிலுக்குப் பதிலாக சோயா எண்ணெய் விநியோகித்தல்.

*5029. திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாமாயிலுக்குப் பதிலாக சோயா எண்ணெயை விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், ஒரு கிலோ சோயா எண்ணெய்க்கு அரசு நிர்ணயிக்கும் விலை என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மைய அரசு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்குவதற்காக சோயா எண்ணெயை 1984-ல் அளித்தார்கள். அதற்கு பொதுமக்களிடையே வரவேற்பு இல்லை. அதனால் அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஆகவே, பாமாயிலுக்குப் பதிலாக சோயா எண்ணெயை வழங்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா எண்ணெயில் கொழுப்புச் சத்து மிகவும் குறைவாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே, இதை மிக வசதிபடைத்தவர்கள் விரும்பி சாப்பிடுவதாக சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த எண்ணெய் சாப்பிட்டால் கறுப்பான நிறம் உள்ளவர்கள்கூட சிகப்பாக மாறுவார்கள் என்றுகூட சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை திரு. சின்னசாமிக்கு மட்டுமாவது வழங்கச் செய்யலாம். (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : அப்படி சொல்லித்தான் விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனுடைய உற்பத்தி மூலப்பொருள் குறிப்பாக பெரியார் மாவட்டத்திலே தான் அதிகமாக ஊடுபயிர் செய்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழிற்சாலையை அரசாங்கமே முன்வந்து

1992 ஏப்ரல் 21]

அமைக்க முன் வருமா? சோயா எண்ணெய் தயாரிக்கிற தொழிற்சாலை தமிழ்நாட்டில் தற்போது எத்தனை உள்ளது? அது எங்குள்ளது என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-ல் மத்திய அரசு நமக்கு 19,500 டன் சோயா எண்ணெயை வழங்கியது. அதை கடைகளுக்கு அனுப்பி விற்பதற்கு நடவடிக்கை எடுத்த போது வெறும் 9,400 டன்தான் விற்றது. மற்றது அப்படியே திரும்பி வந்துவிட்டது. இந்த எண்ணெயில் ஒருவகையான மீன் வாசனை அல்லது மீன் நாற்றம் இருக்கின்ற காரணத்தால் மக்கள் வாங்க மறுத்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதிலே நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால் மறுபடியும் இந்த முயற்சியை அரசு எடுத்துக்கொள்ளவில்லை. மேலும் மத்திய அரசு கொடுக்கின்ற எண்ணெயைத்தான் நாம் விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம். சமையல் எண்ணெய் அவ்வப்போது மைய அரசால் வழங்கப்படுகிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரியும். ஆகவே அப்படிப்பட்ட முயற்சியை மீண்டும் எடுப்பதாக யோசனை இல்லை. யார் யார் எங்கு சோயா எண்ணெய் தயாரிக்கிறார்கள் என்கிற செய்திக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாக கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் எண்ணெய் வாசனை அடிப்பதாக சொல்கிறார்கள். மீனே இப்பொழுது குறைந்த விலைக்கு கிடைக்காத அளவுக்கு மக்கள் விரும்பி சாப்பிடுகிறார்கள். அதைப்போல இப்பொழுது எத்தனையோ வாசனை திரவியம் தயாரிக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ஆயிலில் மீன் வாசனையைக் குறைத்து நல்ல வாசம் வருகின்ற ஆயிலாக கூட தயாரிக்க முடியும். இப்பொது விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற அந்த மூலப் பொருளுக்கு என்ன விலை நிர்ணயிக்கிறார்கள்?

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சோயா எண்ணெய் விநியோகிப்பது பற்றிய கேள்வி. அதனுடைய விலை என்ன, எங்கெங்கே பயிர் செய்யப்படுகிறது என்கிற கேள்விகளுக்கெல்லாம் அவர் பதில் சொல்ல முடியாது. இது தொடர்புடைய கேள்வியாக இருந்தால் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : இதை ஒரு தனியார் நிறுவனம்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விவசாயிகளுக்கு ஏதாவது விலை நிர்ணயம் செய்து வாங்குகிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எண்ணெயை விற்கின்ற போதுதான் விலையைப் பற்றிய பிரச்சினையே வருகிறது. 1984-ல் நாம் விற்றபோது அதனுடைய விலை 14 அல்லது 15 ரூபாய் கிலோவுக்கு இருந்தது. நாம் இப்போது விற்காத காரணத்தால் விலையை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா மொச்சை அமெரிக்காவிலே அதிகமாக விளைவதால் அந்த அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் சோயா எண்ணெயைப் பற்றி விளம்பரப்படுத்துவதற்காகவே, அதிலே கொழுப்புச் சத்து குறைவென்றும், நம்முடைய தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் ஆகியவற்றில் கொழுப்புச் சத்து அதிகமென்று சொல்லியும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள் என்று ஒரு செய்தி பத்திரிக்கையிலே போட்டிருந்தார்கள். மக்கள் விரும்பாத சோயா எண்ணெய்க்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து சோயா எண்ணெய் உற்பத்தியை இங்கே கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமா? மேலும் விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுக்காமல் அந்தக் கம்பெனிகள் ஏமாற்றிக்கொண்டிருப்பதை அரசு தடை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் முரண்பட்ட கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இரண்டையும் அரசு கவனத்திலே கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதியைப்பெற்று பொள்ளாச்சி மகாலிங்கத்தினுடைய சக்தி நிறுவனம் ''சக்தி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சோயாஸ்'' என்று சோயா எண்ணெய் தயாரிக்கும் தொழிற் சாலையை பொள்ளாச்சியில் அமைத்திருக்கிறார்கள். அந்த சக்தி நிறுவனத்தாலே தயாரிக்கப்படும் சோயா எண்ணெய் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று மக்கள் மத்தியில் கருத்து இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொழிற் சாலையிலே தயாரிக்கப்படுகின்ற சோயா எண்ணெயை வெளி மாநிலங்களுக்கு இன்றைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசினுடைய நிதியைப் பெற்று தமிழ்நாட்டில் நடக்கின்ற தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் எண்ணெயை தமிழக அரசே பெற்று, தமிழக மக்களுக்கு விநியோகிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே அந்த ஆலை துவக்கப்பட்டு, அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது. முதலில் கோவை மாவட்டம், பெரியார் மாவட்டத்தில் இருக்கிற வர்கள் அதை வாங்கிச் சாப்பிட்டு, உண்மையிலேயே அது நன்றாக இருக்கிறதென்று சொன்னால் அதைத் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 586, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

586—

தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அரசு ஊழியராக்குதல்.

*5267.—திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா? :

தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை அரசு ஊழியர் களாக ஆக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்படி அந்தந்த சங்கங்களின் கட்டுப்பாட்டில் பணி புரிகின்றனர்; எனவே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க இயலாது.

திரு. ப. கலியபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல்வேறு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் பணி நீக்கம்செய்யப்படுவோமோ